இந்திய உச்ச நீதிமன்றம்

2022-ஆம் ஆண்டு அக்டோபர் திங்கள் 11-ஆம் நாள்

முன்னிலை

மாண்புமிகு நீதியரசர் திரு. பி.ஆர். கவய்

மற்றும்

மாண்புமிகு நீதியரசர் திரு. சி.டி. ரவிகுமார்

குற்றவியல் மேல்முறையீடு எண் 1757/2022

(சிறப்பு அனுமதி மனு (குற்றவியல்) எண் 8882/2015-லிருந்து எழுகிறது)

லாலன்குமார் சிங் மற்றும் பலர் மேல்முறையீட்டாளர்கள்

-எதிர்

மகாராஷ்டிர மாநில அரசு எதிர்மேல்முறையீட்டாளர்

தீர்ப்புரை

மாண்புமிகு நீதியரசர் திரு. பி.ஆர். கவய்:

1. அனுமதி வழங்கப்பட்டது.

2. பீட், கற்றறிந்த தலைமை நீதித்துறை நடுவரால் (இதில் இதற்குப்பிறகு " கற்றறிந்த த.நீ.ந. எனக் குறிப்பிடப் படுவார்) பிறப்பிக்கப்பட்ட 2009-ஆம் ஆண்டு மார்ச் 30-ஆம் தேதியிடப்பட்ட நீதிமுறைக் கட்டளைக்கான உத்தரவையும், அதற்கெதிராக மேல்முறையீட்டாளர்களால் தாக்கல் செய்யப்பட்டுள்ள குற்றவியல் சீராய்வு மனு எண் 115/2013 என்ற குற்றவியல் சீராய்வைத் தள்ளுபடி செய்து, பீட், கற்றறிந்த அமர்வு நீதிபதியால் பிறப்பிக்கப்பட்ட, 2014-ஆம் ஆண்டு நவம்பர் 25-ஆம் தேதியிடப்பட்ட உத்தரவையும் உறுதிசெய்து, இதிலுள்ள மேல்முறையீட்டாளர்களால் தாக்கல் செய்யப்பட்ட குற்றவியல் நீதிப்பேராணை மனு எண் 288/2015- ஐ தள்ளுபடி செய்து,

இதன்மூலம் மேற்படி குற்றவியல் நீதிப்பேராணை மனுவில், ஔரங்காபாத்திலுள்ள பம்பாய் உயர் நீதிமன்ற கற்றறிந்த தனியமர் நீதியரசரால் வழங்கப்பட்ட 2015-ஆம் ஆண்டு ஜூன் 25-ஆம் தேதியிடப்பட்ட தீர்ப்புரை மற்றும் உத்தரவிலிருந்து இம்மேல்முறையீடு எழுகிறது.

3. தற்போதைய மேல்முறையீட்டுக்கு வழிகோலிய பொருண்மைகளின் சுருக்கம் பின்வருமாறு:

3.1. மேல்முறையீட்டாளர்கள், தி/ள்.கேஷெட் பார்மாசுடிகல்ஸ் பிரைவேட் லிமிடெட் (இதில் இதற்குப்பிறகு " கே.பா.பி.லி. " என குறிப்பிடப்படும்) -இன் இயக்குநர்களாவர்.1945-ஆம் ஆண்டு மருந்துகள் மற்றும் அழகு சாதனப் பொருட்களின் விதிகளின் (இதில் இதற்குப்பிறகு " மேற்படி விதிகள் " எனக் குறிப்பிடப்படும்) அட்டவணை சி & சி (1) -இன் கீழ்வருகின்ற ' ஹெம்ஃபர் சிரப் '- ஐ தயாரிப்பதற்கு கே.பா.பி.லி.-க்கு அனுமதி வழங்கப்பட்டது.

3.2. 2006-ஆம் ஆண்டு ஆகஸ்டு 30-ஆம் தேதியன்று மகாராஷ்டிரா, பீட்டிலுள்ள உணவு மற்றும் மருந்துகள் நிருவாகத்தின் அப்போதைய மருந்து ஆய்வாளரான திரு. என்.எ. யாதவ், பீட்டிலுள்ள தி/ள்.பிரியா ஏஜென்சீஸ் வளாகத்தைப் பார்வையிட்டு 'ஹெம்ஃபர் சிரப்'-ஐ வாங்கி, அதிலிருந்து அவர் மருந்தின் மாதிரியை எடுத்துக்கொண்டார். 2006-ஆம் ஆண்டு ஆகஸ்டு 31-ஆம் தேதியன்று அவர் மருந்தைச் சோதனை செய்யும்பொருட்டு, அந்த மாதிரியை மும்பையிலுள்ள மகாராஷ்டிர மாநில மருந்துக் கட்டுப்பாட்டு ஆய்வக அரசு பகுப்பாய்வாளருக்கு அனுப்பினார்.அவர், அரசு பகுப்பாய்வாளரிடமிருந்து 2007-ஆம் ஆண்டு பிப்ரவரி 13-ஆம் தேதியிடப்பட்ட ஆய்வறிக்கையை 2007-ஆம் ஆண்டு பிப்ரவரி 26-ஆம் தேதியன்று பெற்றுக்கொண்டார்; அதில் அடங்கியுள்ள சைநோகோபாலமைன் என்ற பொருள், அனுமதிக்கத்தக்க அளவான அதாவது, முகப்புச் சீட்டில் குறிப்பிடப்பட்டுள்ள அளவான 39% -ஐ விட குறைவாகவுள்ளதால், அது குறிப்பிட்ட தர அளவில் இல்லை என்று தெரிவிக்கப்பட்டது. அதேநாளன்று, ஆய்வறிக்கை குறித்து மருந்தின் தயாரிப்பாளரான, அதாவது, கே.பா.பி.லி.-க்கு பதிவு அஞ்சல் மூலம் தகவல் தெரிவிக்கப்பட்டது.

3.3. 2007-ஆம் ஆண்டு மார்ச் 29-ஆம் தேதியன்று, கே.பா.பி.லி.-இன் தர உத்தரவாதப் பிரிவின் (கியூ.$$_0_$$) துணை மேலாளர், திரு. விஜய் ஜெயின், மாதிரியை பகுப்பாய்விற்கு மீண்டும் அனுப்பும்படி மருந்து ஆய்வாளரைக் கேட்டுக்-கொண்டார்.கே.பா.பி.லி.-இன் விநியோகஸ்தரான தி/ள்.அல்கெம் ஆய்வகத்தால் தாக்கல் செய்யப்பட்ட விண்ணப்பத்திற்கிணங்க, பீட், கற்றறிந்த தலைமை குற்றவியல் நீதித்துறை நடுவர், 2007-ஆம் ஆண்டு ஏப்ரல் 24-ஆம் தேதியன்று ' ஹெம்ஃபர் சிரப் '-இன் மாதிரியை மீண்டும் பகுப்பாய்வு செய்வதற்காக அனுப்பிவைத்தார்.2007-ஆம் ஆண்டு ஜூலை 10-ஆம் தேதியன்று, பீட், கற்றறிந்த தலைமை குற்றவியல் நீதித்துறை நடுவர், கொல்கத்தா மத்திய மருந்து ஆய்வகத்திடமிருந்து ஓர் ஆய்வு அறிக்கையைப் பெற்றுக்கொண்டார்.அந்த மாதிரியில் அடங்கியுள்ள சைநோகோபாலமைன் என்ற பொருள் ஏற்றுக்கொள்ளப்பட்ட வரையறைக்கேற்ப இல்லாததால் அது குறிப்பிடப்பட்ட தர அளவில் இல்லை என அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

3.4. மருந்து ஆய்வாளர், 2008-ஆம் ஆண்டு ஆகஸ்டு 21-ஆம் தேதியிட்ட கடிதத்தின் மூலம், இயக்குநர்களின் விவரங்கள், நிறுவனத்தின் செயல்முறை விதிகள், அமைப்பு முறையேடு, மருந்துகள் தயாரிப்பதற்கான மற்றும் விற்பதற்கான உரிமத்தின் நகல்கள், தொழில்நுட்பப் பிரிவிலுள்ள நபர்களின் விவரங்கள் ஆகியவற்றை அளிக்கும்படி கே.பா.பி.லி.- ஐ கோரினார், மேலும், 1940-ஆம் ஆண்டு மருந்துகள் மற்றும் அழகு சாதனப் பொருட்கள் சட்டம் (இதில் இதற்குப்பிறகு "மேற்படி சட்டம்" எனக் குறிப்பிடப்படும்)-இன் கீழ் அத்தகவல்கள் யாவும் கொடுக்கப்பட வேண்டியவையேயாகும்.கே.பா.பி.லி., இக்கடிதத்திற்கான பதிலில், 2007-ஆம் ஆண்டு ஜூலை 10-ஆம் தேதியிடப்பட்ட அறிக்கையானது, மத்திய மருந்து ஆய்வகத்தின் இயக்குநரால் கையொப்பமிடப்படாமல் "பொறுப்பு இயக்குநரால்" கையொப்பமிடப்பட்டுள்ளது எனத் தெரிவித்து, மத்திய மருந்து ஆய்வகத்தின் இயக்குநரால் முறையாகக் கையொப்பமிடப்பட்ட அறிக்கையை அனுப்பும்படி கோரியது.

3.5. 2009-ஆம் ஆண்டு ஜனவரி 12-ஆம் தேதியிடப்பட்ட கடிதத்தின் மூலம், மருந்து ஆய்வாளர், ஏற்கெனவே கோரப்பட்டுள்ள விவரங்களை அளிக்கும்படி கே.பா.பி.லி.- ஐ மீண்டும் கோரினார்.2009 ஆம் ஆண்டு பிப்ரவரி 12-ஆம் தேதியிடப்பட்ட கடிதத்தின்

மூலம் மருந்து ஆய்வாளரால் கோரப்பட்ட தகவல்களையும், ஆவணங்களையும் கே.பா.பி.லி. அளித்தது. அதில் உணவு மற்றும் மருந்துப் பொருட்கள் நிருவாகத்தால் அங்கீகரிக்கப்பட்டுள்ள வாய்வழி உட்கொள்ளும் திரவ மருந்துகள் தயாரிக்கும் வேதியியலாளரான திரு. அசோக் குமாரின் மேற்பார்வையிலும், தொழில்நுட்ப வழிகாட்டுதலின்பேரிலும் 'ஹெம்ஃபர் சிரப்' தயாரிக்கப் பட்டுள்ளதாக உறுதிபட தெரிவிக்கப்பட்டுள்ளது.

3.6. திரு. அசோக் குமார் (9-ஆம் குற்றஞ்சாட்டப் பட்டவர்) மேற்படி ' ஹெம்ஃபர் சிரப்'-இன் தொகுப்பானது, அவரது மேற்பார்வையின்கீழ் தயாரிக்கப்பட்டதாகவும், அம்மருந்து தேவையான தரநிலைகளுக்கேற்ப உள்ளதாகவும் தெரிவித்து, மருந்து ஆய்வாளருக்கு 2009-ஆம் ஆண்டு பிப்ரவரி 13-ஆம் தேதியன்று நேரடி கடிதம் ஒன்றை எழுதினார்.அதேபோன்று, திரு. நரேஷ் ராய் (10-ஆம் குற்றஞ்சாட்டப்பட்டவர்) 2009-ஆம் ஆண்டு பிப்ரவரி 13-ஆம் தேதியன்று, மருந்து ஆய்வாளருக்கு எழுதிய கடிதத்தில் மேற்குறிப்பிட்ட ' ஹெம்ஃபர் சிரப் '-இன் தொகுப்பானது அவரது மேற்பார்வையின் கீழ் ஆய்வு செய்யப்பட்டதாகவும், ஆய்வு முடிவிலிருந்து அம்மருந்து தேவையான தரநிலைகளுக்கேற்ப உள்ளதாகவும் தெரிவித்துள்ளார்.

3.7. மருந்து தயாரிப்பு நிறுவனத்திற்கு எதிராக இணை ஆணையர் (த.$$_0_$$) மற்றும் மும்பை உணவு மற்றும் மருந்துப் பொருட்கள் நிருவாகக் கட்டுப்பாட்டு அதிகாரியால் சட்ட நடவடிக்கை எடுப்பதற்கான உத்தரவைத் தொடர்ந்து, மேற்படி சட்டத்தின் பிரிவு 18 (அ) (i) உடன் பிரிவுகள் 16 மற்றும் 34 மற்றும் மேற்படி சட்டத்தின் பிரிவு 27 (ஈ) -இன் கீழ் தண்டிக்கத்தக்க குற்றங்களுக்காக பீட், கற்றறிந்த தலைமை குற்றவியல் நீதித்துறை நடுவர் முன்பு ஆர்.சி.சி. 233/2009 என்ற எண் கொண்ட முறையீடு ஒன்று தாக்கல் செய்யப்பட்டது.மேற்படி முறையீட்டில், நிறுமத்தின் இயக்குநர்களான தற்போதைய மேல்முறையீட்டாளர்கள் 5 முதல் 8 வரையிலான குற்றஞ்சாட்டப்பட்டவர்களாக வரிசையிடப்பட்டனர்.

3.8. பீட், கற்றறிந்த தலைமை குற்றவியல் நீதித்துறை நடுவர், இதிலுள்ள மேல்முறையீட்டாளர்கள் உட்பட அனைத்து எதிரிகளுக்கும், 2009-ஆம் ஆண்டு மார்ச் 30-ஆம் தேதியிடப்பட்ட உத்தரவின் மூலம் அழைப்பாணைகளை அனுப்பினார். இயக்குநர்களால் ஆற்றப்பட்ட கடமைப்பங்கு குறித்து மேற்படி சட்டப்பிரிவு 34-

இன்படியாக எந்தக் குறிப்பிட்ட கூற்றுகளும் இல்லை என்ற காரணத்தின்பேரில், பீட், கற்றறிந்த அமர்வு நீதிபதி முன்பு மேல்முறையீட்டாளர்கள் அழைப்பாணை உத்தரவுக்கு எதிராக குற்றவியல் சீராய்வு மனுவைத் தாக்கல் செய்ததன் மூலம் அழைப்பாணை உத்தரவை செல்லாததாக்கும்படி கோரினர்.ஆயினும், மேல்முறையீட்டாளர்கள், 'ஹெம்ஃபர் மருந்தை' தயாரித்து விநியோகிப்பதிலும், விற்பனை செய்வதிலும் சம்பந்தப்பட்டவர்கள் என முறையீட்டில் குறிப்பிட்ட வாதக்கூறு இருப்பதால், பீட், கற்றறிந்த அமர்வு நீதிபதி மேற்படி குற்றவியல் சீராய்வு மனுவை நிராகரித்தார்.

3.9. கற்றறிந்த அமர்வு நீதிபதியால் பிறப்பிக்கப்பட்ட உத்தரவை எதிர்த்து, மேல்முறையீட்டாளர்கள் மும்பை உயர் நீதிமன்றத்தின் முன்பு குற்றவியல் நீதிப்பேராணை மனு ஒன்றைத் தாக்கல் செய்தனர். இயக்குநர்கள் அனைவருமே கே.பா.பி.லி.-இன் அலுவலை நடத்திவந்தனர்.எனவே, அவர்கள் தயாரிப்பு முறையில் சம்பந்தப்பட்டிருந்தனர் என்ற காரணத்தின்பேரில் உயர் நீதிமன்றம், எதிர்ப்புக்குள்ளான உத்தரவு மூலம் மேற்படி குற்றவியல் நீதிப்பேராணை மனுவைத் தள்ளுபடி செய்தது.

3.10.எனவே, தற்போதைய மேல்முறையீடு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

4. நாங்கள், மேல்முறையீட்டாளர்களுக்காக முன்னிலையான கற்றறிந்த மூத்த வழக்குரைஞர்களான திரு. சி.யூ. சிங் மற்றும் திரு. அனுபம் லால் தாஸ் மற்றும் எதிர்மேல்முறையீட்டாளரான மகாராஷ்டிர மாநில அரசின் சார்பாக முன்னிலையான கற்றறிந்த வழக்குரைஞர் திரு. சித்தார்த் தர்மதிகாரி ஆகியோரின் வாதங்களைக் கேட்டோம்.

5. குற்றம் புரிந்த சமயத்தில், ஒரு நிறுமத்திற்கு பொறுப்பேற்றிருந்தவரும், அந்நிறுமத்தின் அலுவலை நடத்துவதற்காக அதன் பொறுப்புடையவராயிருந்த அந்த நபரோடு நிறுமமும் அக்குற்றம் புரிந்ததாகவும், அதற்கேற்ப அவர்களுக்கு எதிராக நடவடிக்கை எடுத்து அவர்கள் தண்டிக்கப்படுவதற்குரியவர்கள் எனக் கருதப்படவேண்டும் என்று மேற்படி சட்டத்தின் பிரிவு 34 வகைசெய்வதாக கற்றறிந்த மூத்த வழக்குரைஞர்களான திரு. சி.யூ. சிங் மற்றும் திரு. அனுபம் லால் தாஸ் பணிந்துரைத்தனர்.

6. மேற்படி விதிகளின் விதி 76-ஆனது, பகுதி X(பி) மற்றும் அட்டவணை X-இல் குறிப்பிடப்பட்டுள்ள மருந்துகளைத் தவிர அட்டவணை சி, சி(1) -இல் குறிப்பிடப் பட்டுள்ள மருந்துகளையோ அல்லது அட்டவணை சி, சி(1) மற்றும் X-இல் குறிப்பிடப்பட்டுள்ள மருந்துகளையோ தயாரிப்பதற்கான உரிமத்தின் படிவத்தையும், அந்த உரிமம் வழங்குவதற்கான நிபந்தனைகளையும் பரிந்துரைக்கிறது என கற்றறிந்த மூத்த வழக்குரைஞர் திரு. சி.யூ. சிங் பணிந்துரைத்துள்ளார்.படிவம் 28 அல்லது படிவம் 28 (பி) -இல் உரிமம் வழங்குவதற்கு முன்பு விண்ணப்பதாரர்களால் சில குறிப்பிட்ட நிபந்தனைகள் நிறைவேற்றப்படவேண்டும் என்றும் அவர் சமர்ப்பித்துள்ளார்.மேற்படி விதிகளின் விதி 76-இன் துணைவிதி (1) -இன் கீழ் வகுத்துரைக்கப்பட்டுள்ளபடி, முழுநேரப் பணியாளராகவும், மேற்படி விதிகளின் கீழ் வகுத்துரைக்கப்பட்டவாறு தேவையான தகுதியைப் பெற்றுள்ள வருமான குறைந்தபட்சம் ஒரு நபரைக்கொண்ட தகுதிபெற்ற தொழில்நுட்ப பணியாளரின் தீவிர வழிகாட்டுதலின்பேரிலும், நேரடி கண்காணிப்பின்பேரிலும் தயாரிப்பு செய்யப்படுதல் வேண்டும் என்றும் அவர் பணிந்துரைத்துள்ளார்.மேற்படி விதிகளின் பகுதி X -இன் வகையங்களின்படி, மருந்துப் பொருட்களின் ஆற்றல், தரம் மற்றும் தூய்மை குறித்த " ஆய்வை மேற்கொள்வதற்கு மேற்படி விதிகளின் விதி 76-இன் துணைவிதி (4) -இன் கீழ் விண்ணப்பதாரர் போதிய பணியாளர்கள், வளாகங்கள் மற்றும் ஆய்வக உபகரணங்கள் ஆகியவற்றை வழங்கி செயலாற்றவேண்டும் என்றும் அவர் சமர்ப்பித்துள்ளார்.மேலும், மேற்படி விதிகளின் விதி 76-இன் துணைவிதி 4 (அ) -இன் கீழ் ஆய்வுப் பிரிவின் தலைவர், மேற்சொன்ன நோக்கத்திற்காக அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகத்திடமிருந்து மருத்துவம் அல்லது அறிவியல் அல்லது மருந்தகம் அல்லது மருந்துசார் வேதியியலில் பட்டம் பெற்றிருக்கவேண்டும் என்றும் அவர் பணிந்துரைத்துள்ளார்.மேலும், அவர் மருந்துகளை ஆய்வு செய்வதில் அனுபவம் பெற்றிருக்கவேண்டும்; அது உரிமம் அளிக்கும் அதிகாரியின் கருத்துப்படி போதுமானதாக கருதப்படுகிறது.மேற்படி விதிகளின் விதி 76-இன்படி படிவம் 28-ஆனது மருந்துகளைத் தயாரித்து விற்பனை செய்வதற்கும், விநியோகிப்பதற்குமான உரிமமாகும் என்று சமர்ப்பித்துள்ளார்.படிவம் 28-இல் அங்கீகரிக்கப்பட்டுள்ள தகுதிவாய்ந்த தொழில்நுட்பப்பணியாளரின் பெயர்கள் குறிப்பிடப்படவேண்டும் என்றும் கற்றறிந்த மூத்த வழக்குரைஞர் பணிந்துரைத்துள்ளார். மேலும், உரிமத்தின் அந்த நிபந்தனைகளிலுள்ள 3-ஆவது

நிபந்தனை தகுதிப்பெற்ற தொழில்நுட்ப பணியாளர்களில் ஏதேனும் மாற்றமிருப்பின், அது, உரிமம் வழங்கும் அதிகாரியிடம் உடனடியாக தெரிவிக்கப்படுதல்வேண்டும் என்று கோருகிறது என்றும் அவர் பணிந்துரைத்துள்ளார்.

7. மருந்துப் பொருட்களை நல்லமுறையில் தயாரிப்பதற்காகவும், அதற்குத் தேவைப்படுகின்ற வளாகங்கள், தொழிற்சாலை மற்றும் உபகரணங்கள் ஆகியவற்றை மேற்படி விதிகளுக்குரிய அட்டவணை எம் குறிப்பிடுகிறது என்று கற்றறிந்த மூத்த வழக்குரைஞர் பணிந்துரைத் துள்ளார்.வரையறுக்கப்பட்ட கல்வித் தகுதியுடன் மருந்துப் பொருட்களின் உரிய அளவு மற்றும்/அல்லது அவற்றின் செயல்திறன் குறித்த செயல்முறை அனுபவம் பெற்றுள்ள, தகுதிவாய்ந்த தொழில்நுட்பப் பணியாளரின் நேரடிக் கண்காணிப்பின்கீழ் மருந்து தயாரிக்கப்படவேண்டும் என்று அட்டவணை எம்-இன் பகுதி I-இன் கூறு 6.1 வகைசெய்கிறது.மேலும், கூறு 6.2-இன்படி, தரக் கட்டுப்பாட்டு ஆய்வகத்தின் தலைவர், தயாரிப்புப் பிரிவைச் சாராதவராக இருத்தல்வேண்டும் என்பதும் கற்றறிந்த மூத்த வழக்குரைஞரின் வாதமாகும்.உரிமம் பெற்றவரின் முழுநேரப் பணியாளர்களாக இருக்கின்ற தகுதிவாய்ந்த தொழில்நுட்பப் பணியாளரின் நேரடிக் கண்காணிப்பின் கீழ் ஆய்வு நடத்தப்படவேண்டும் என்றும் கூறுகிறது.

8. மேலும், பதவியிலுள்ள உரிமம் வழங்கும் அதிகாரியால் முறையாகக் கையொப்பமிடப்பட்டுள்ள உரிமத்தில், அங்கீகரிக்கப்பட்ட தகுதிவாய்ந்த தொழில்நுட்ப பணியாளர்களின் பெயர்கள் ஏற்கெனவே குறிப்பிடப்பட்டுள்ளன என்று திரு. சிங் பணிந்துரைத்துள்ளார். மேலும், தர உத்தரவாதப் பிரிவின் உதவி மேலாளரான திரு. நரேஷ் ராய் (10-ஆம் குற்றஞ்சாட்டப்பட்டவர்) எம்.எஸ். பீட், உணவு மற்றும் மருந்து நிர்வாகத்தின் மருந்து ஆய்வாளருக்கு அனுப்பிய, 2009-ஆம் ஆண்டு பிப்ரவரி 13-ஆம் தேதியிடப்பட்ட பதில் கடிதத்தில், மூலப்பொருட்கள் தரக் கட்டுப்பாட்டுத் துறையின் வேதியியலாளரான திரு. அப்தாப் அவர்களின் கண்காணிப்பின் கீழ் பகுப்பாய்வு செய்யப்பட்டதாகவும் சமர்ப்பித்துள்ளார்.மேலும், மேற்சொன்ன நிறைவுபெற்ற மருந்துத் தொகுதியின் மருந்துகள் திரு. எம்.கே.ஷர்மா அவர்களின் கண்காணிப்பின் கீழ் பகுப்பாய்வு செய்யப்பட்ட தாகவும் தெரிவித்துள்ளார்.திரு. நரேஷ் ராய் (10-ஆம் குற்றஞ்சாட்டப்பட்டவர்) தான்

தகுதிபெற்ற நபராக இராஜஸ்தானிலுள்ள உ.ம.நி.-ஆல் (உணவு மற்றும் மருந்து நிருவாகம்) அங்கீகரிக்கப்பட்டவர் எனவும் தெரிவித்துள்ளார்.

9. அதேபோன்று, உற்பத்தி பிரிவின் உதவி மேலாளரான திரு. அசோக் குமார் (9-ஆம் குற்றஞ்சாட்டப்பட்டவர்) தான் இராஜஸ்தான் உ.ம.நி.-ஆல் அங்கீகரிக்கப்பட்டவர் என 2009-ஆம் ஆண்டு பிப்ரவரி 13-ஆம் தேதியிடப்பட்ட கடிதத்தின் மூலம் தெரிவித்துள்ளதாக கற்றறிந்த மூத்த வழக்குரைஞர் பணிந்துரைத்துள்ளார்.தரக் கட்டுப்பாட்டு பிரிவின் இறுதி ஒப்புதலுக்குப்பின் மருந்துப் பொருட்கள் விடுவிக்கப்பட்டுள்ளன.மேலும், மேற்படி மருந்துத் தொகுதியின் தயாரிப்பு ஆவணம் அவரால் தயாரிக்கப்பட்டது என்றும், அதில் அவரது கையொப்பம் இடப்பட்டுள்ளது என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

10. குற்றஞ்சாட்டப்பட்ட நிறுமத்தின் இயக்குநர்களான தற்போதைய மேல்முறையீட்டாளர்கள் நிறுமத்தின் அலுவலை நடத்துவதற்கான நிறுமத்திற்குப் பொறுப்புடையவர்கள் எனக் குறிப்பிடுவது மட்டுமே அவர்களுக்கு எதிராக வழக்கு தொடர்வதற்குப் போதுமானதாகாது என்று திரு. சிங் பணிந்துரைத்துள்ளார்.நிறுமத்தின் அலுவலை நடத்துவதில் ஒரு நபருக்குரிய பங்கு என்ன என்பதைக் குறித்த குறிப்பிட்ட வாதக்கூறு இல்லாதவரை, அவர் நிறுமத்தின் இயக்குநர் என்பதன் அடிப்படையிலேயே அவருக்கு எதிராக நடவடிக்கை எடுக்கமுடியாது என்று பணிந்துரைக்கப்பட்டுள்ளது.அவர் இக்கருத்துரைக்கு ஆதரவு அளிக்கும்விதமாக இந்த நீதிமன்றத்தின் பல்வேறு தீர்ப்புரைகளின்மீது சார்ந்துநின்றார்.

11. மேலும், கற்றறிந்த தலைமை குற்றவியல் நீதித்துறை நடுவரால் பிறப்பிக்கப்பட்ட நீதிமுறைக் கட்டளை அனுப்புதல் குறித்த முறைப்படியான உத்தரவு ஏதுமில்லை என்று திரு. சி.யூ. சிங் பணிந்துரைத்துள்ளார்.நீதிமுறைக் கட்டளை அனுப்புகையில், வழக்கு நடவடிக்கையைத் தொடருவதற்கு போதிய காரணம் உள்ளது என்று உளநிறைவடையச்செய்யும் பொறுப்பு நீதித்துறை நடுவர் மீது அமைந்துள்ளது என்று சமர்ப்பிக்கப்பட்டுள்ளது.கற்றறிந்த தலைமை குற்றவியல் நீதித்துறை நடுவர் சிந்தை செலுத்தியுள்ளதைப் பிரதிபலிக்கின்ற அத்தகைய உத்தரவு ஏதுமில்லை. மேலும்,

இந்தக் காரணத்தின் பேரிலுங்கூட எதிர்ப்புக்குள்ளான உத்தரவு நீக்கறவு செய்யப் படுவதற்குரியதாகிறது என்றும் அவர் பணிந்துரைத்துள்ளார்.

12. அதற்குமாறாக, முறையீட்டை பார்வையிட்டதன் பேரிலும், குறிப்பாக, அதிலுள்ள பத்திகள் 3 மற்றும் 25-லிருந்தும், மேற்படி சட்டப்பிரிவு 34-இன் நிபந்தனைக்கு ஏற்ப இணக்கமுற உள்ளது என்பதைத் தெரிவிக்கின்றன என்று கற்றறிந்த வழக்குரைஞர் திரு. சித்தார்த் தர்மதிகாரி பணிந்துரைத்துள்ளார். முறையீட்டைக் கொஞ்சங்கொஞ்சமாக வாசிக்காமல் முழுமையாக வாசிக்கவேண்டும் என்றும் அவர் பணிந்துரைத்துள்ளார். விசாரணை நீதிமன்றம், நீதிமுறைக் கட்டளை அனுப்புகையில் விரிவான உத்தரவைப் பிறப்பிப்பதற்கான சட்டத்தேவையேதுமில்லை என்ற அறுதியுரைக்கு ஆதரவாக கற்றறிந்த வழக்குரைஞர், உ.பி. மாசுக் கட்டுப்பாட்டு வாரியம் -எதிர்-மோகன் மீக்கின்ஸ் லிமிடெட் மற்றும் பலர் [(2000) 3 எஸ். சி.சி. 745] என்ற வழக்கில் இந்நீதிமன்றத்தின் தீர்ப்புரை மீது சார்ந்துநின்றார்.மேலும், முறையீட்டிலுள்ள கூற்றுகள், தற்போதைய மேல்முறையீட்டாளர்களுக்கு எதிராக நடவடிக்கையெடுக்க போதுமானது என்ற அவரது வாதத்திற்காதரவாக, தினேஷ் பி. படேல் மற்றும் பலர் -எதிர்-குஜராத் மாநில அரசு மற்றும் ஒருவர் [(2010) 11 எஸ்.சி.சி. 125] என்ற வழக்கில் இந்நீதிமன்றத்தின் தீர்ப்புரை மீது சார்ந்துநின்றார்.

13. ஹரியானா மாநில அரசு -எதிர்-பிரிஜ் லால் மிட்டல் மற்றும் பலர் [(1998) 5 எஸ்.சி.சி. 343] என்ற வழக்கில் இந்நீதிமன்றம் கருத்துரைத்ததாவது:

"8. இருப்பினும், உயர் நீதிமன்றத்தின் எதிர்ப்புக்குள்ளான தீர்ப்பூரையானது, முற்றிலும் வேறுகாரணத்தின் பேரில் நிலைநிறுத்தப்படவேண்டும் என்று நாங்கள் அறிகிறோம். மறுப்புக்கிடமின்றி, சட்டப்பிரிவு 34 (1) -இன் துணையுடன் மூன்று எதிர்மேல்முறை யீட்டாளர்களும் உற்பத்தியாளர்களின் இயக்குநர்கள் என்றமுறையில் குற்றஞ்சாட்டப்பட்டுள்ளனர். அது பின்வருமாறு:

"34. நிறுமங்களால் செய்யப்படும் குற்றங்கள். (1) இச்சட்டத்தின்படி நிறுமத்தால் ஒரு குற்றம் புரியப்பட்டிருந்தால், குற்றம் புரிந்த சமயத்தில் அந்நிறுமத்திற்கு பொறுப்பேற்றிருந்தவரும், அந்நிறுமத்தின் அலுவலை நடத்தும் பொறுப்புடையவருமான ஒவ்வொரு நபரோடும் நிறுமமும் சேர்ந்து அக்குற்றம் புரிந்ததாகவும், அதற்கேற்ப அவர்களுக்கு எதிராக வழக்கு நடவடிக்கை எடுத்து, தண்டிக்கப்படுவதற்கும் உரியவர்களாகக் கருதப்படவேண்டும்:

வரம்பூரையாக:ஒரு நபர், அவருக்குத் தெரியாமல் குற்றம் புரியப்பட்டதாகவோ அல்லது அவ்வாறான குற்றம் செய்வதைத் தடுப்பதற்காக அவர் உரிய சிரத்தை எடுத்ததாகவோ நிரூபிப்பாராயின், இந்தத் துணைப்பிரிவில் அடங்கியுள்ள எதுவம் இச்சட்டத்தில் வகைசெய்யப்பட்டுள்ளவாறு நபர் எவரையும் எந்தத் தண்டனைக்கும் உரியவராக்காது."

எனவே, ஒரு நபர் ஒரு குறிப்பிட்ட காலக்கட்டத்தில் நிறுமத்தின் பொறுப்பேற்று, அதன் அலுவலை நடத்துவதற்கான பொறுப்புடையவராயிருந்தால் இச்சட்டத்தின் கீழ் நிறுமத்தால் புரியப்படும் குற்றத்திற்காக அந்நபர் பகரப் பொறுப்பாளி என்றமுறையில் தண்டிக்கப்படுவார் என்பது தெரியவருகிறது.ஒரு நபர் நிறுமத்தின் இயக்குநர் என்பதாலேயே, அவரை பொறுப்புரிமையாளராக ஆக்கும்பொருட்டு அவர் மேற்படி தேவைப்பாடுகளைப் பூர்த்திசெய்யவேண்டும் என்பது அவசியமல்ல.மாறாக, ஒரு நபர் நிறுமத்தின் இயக்குநராக இல்லாமலேயே, அந்நிறுமத்தின் பொறுப்பேற்று அதன் அலுவலை நடத்தும் பொறுப்புடையவராய் இருக்கலாம்.எனினும், கேள்விக்குள்ளான முறையீட்டிலிருந்து, எதிர்மேல்முறையீட்டாளர்கள் உற்பத்தியாளர்களின் இயக்குநர்கள் என்ற வெற்று உரையைத் தவிர, அவர்கள் நிறுமத்தின் பொறுப்பேற்று, அதன் அலுவலை நடத்துவதற்கான பொறுப்புடையவராய் இருந்துவந்தனர் என்று பார்த்தமாத்திரத்திலேயே தெரிகின்ற வேறு குற்றச் சாட்டும் இல்லை என்று நாங்கள் அறிகிறோம். "

14. ஒரு நபர் நிறுமத்தின் இயக்குநர் என்பதாலேயே, அவரைப் பொறுப்புரிமையாளராக ஆக்கும் பொருட்டு, மேற்படி சட்டத்தின் பிரிவு 34 (1) -இன் இரு தேவைப்பாடு களையும் அவர் பூர்த்திசெய்யவேண்டும் என்பது அவசியமல்ல என்று இந்நீதிமன்றம் தீர்மானித்துள்ளதைக் காணமுடிகிறது.ஒரு நபர் அந்தக் குறிப்பிட்ட காலக்கட்டத்தில் அந்நிறுமத்தின் பொறுப்பேற்று அதன் அலுவலை நடத்துவதற்கான பொறுப்புடையவர் என்றாலன்றி, அவரை பொறுப்புடையவராகக் கருதமுடியாது என்று தீர்மானிக்கப் பட்டுள்ளது.

15. எஸ்.எம். எஸ். பார்மாசுடிகல்ஸ் லிமிடெட் -எதிர் நீதா பல்லா மற்றும் ஒருவர் [(2005) 8 எஸ்.சி.சி. 89] என்ற வழக்கில், இந்நீதிமன்றம் 1881-ஆம் ஆண்டு மாற்றுமுறையாவணங்கள் சட்டம், பிரிவு 141-இன் கீழ் ஒரு நபர் நிறுமத்தின் இயக்குநராக இருப்பதால் அவரைப் பொறுப்புடையவராக ஆக்கமுடியுமா?என்ற வினா குறித்து பரிசீலித்துள்ளது.இந்நீதிமன்றம் 1956-ஆம் ஆண்டு நிறுமங்கள் சட்டம், பிரிவு 2 (13) -இல் பொருள்வரையறுக்கப் பட்டுள்ளவாறு, " இயக்குநர் " என்ற சொல்லின் பொருள் வரையறையைப் பரிசீலித்துள்ளது. இந்நீதிமன்றம் கருத்துரைத்ததாவது:

" 8.....ஒருவர் நிறுமத்தின் இயக்குநராக இருப்பதால் மட்டுமே, அவர் அந்நிறுமத்தின் சார்பாக குறிப்பிட்ட கடமைகளை நிறைவேற்றவேண்டும் என்று கருத்துரைப்பதற்கில்லை. ஒரு நபர் இயக்குநராக இருந்தாலும், அவருக்கு நிறுமத்தின் அன்றாட செயற்பணிகள் குறித்து தெரியாமல் இருக்கலாம். ஒரு நிறுமத்தின் இயக்குநர் என்ற முறையில், அவர் நிறுமத்தின் இயக்குநர் குழுமக் கூட்டங்களில் பங்கேற்கலாம், அங்குதான் அவர்கள் வழக்கமாக திட்ட கொள்கைகளில் முடிவெடுத்து நிறுமத்தின் அலுவலை நடத்த வழிகாட்டுவர். இயக்குநர்கள் குழுமம், நிறுமத்தின் குழுமத்திலிருந்து ஒன்றோ, இரண்டோ இயக்குநர்களைக்கொண்ட துணைக் குழுக்களை நியமிக்கலாம்; இவர்கள் நிறுமத்தின் அன்றாட செயற்பணிகளுக்காக பொறுப்பாக்கப்பட்டிருக்கலாம். இவை நிறுமத்தின் இயக்குநர்கள் குழுமத்தின் தீர்மானங்களின் பகுதியாக அமையக்கூடிய விடயங்களாகும். எதுவுமே வாய்மொழியானதல்ல.ஒரு நிறுமத்தின் இயக்குநரின் பங்கு என்பது ஒவ்வொரு வழக்கின் தனித்துவமான பொருண்மைகளைச் சார்ந்த சங்கதி குறித்த ஒரு பிரச்சினையாக உள்ளது என்பது இதிலிருந்து தெரியவருகின்றது. நிறுமத்தின் இயக்குநரே அதன் அன்றாட அலுவல்களின்

பொறுப்பிலிருப்பவர் என்பது பொது விதியல்ல.இயக்குநர், மேலாளர் அல்லது செயலாளர் எவராயினும் அந்தக் குறிப்பிட்ட சொல்லில் வியக்கத்தக்க விடயம் ஏதுமில்லை என்ற கூறை விளக்கும்பொருட்டு நாங்கள் நிறுமத்தின் இயக்குநரின் நிலைப்பாட்டினை விவாதித்துள்ளோம். இவையாவும் நிறுமத்தின் அதிகாரிகளுக்கு ஒதுக்கப்பட்டுள்ள உரிய கடமைப்பணிகளைச் சார்ந்தே உள்ளன..... "

16. ஒரு நபர் நிறுமத்தின் இயக்குநர் என்பதாலேயே அவர் நிறுமத்தின் அன்றாட செயற்பணிகள் குறித்து அறிந்திருப்பது அவசியமல்ல என்று தீர்மானிக்கப்பட்டது.ஒரு நிறுமத்தின் இயக்குநரே அதன் அன்றாட அலுவல்களின் பொறுப்பிலிருப்பவர் என்பது பொது விதியல்ல என்று இந்நீதிமன்றம் தீர்மானித்தது. எனவே, ஒரு நிறுமத்தின் இயக்குநர் எவ்வாறு நிறுமத்தின் அன்றாட அலுவல்களுக்கு பொறுப்பேற்றார் அல்லது அந்நிறுமத்தின் அலுவல்களுக்கு பொறுப்புடையவர் என்பதை உற றுதிப்படுத்துவது அவசியமாகிறது. ஆயினும் ஒரு நிறுமத்தின் மேலாண்மை இயக்குநரின் அல்லது இணை மேலாண்மை இயக்குநரின் நிலைப்பாடு வேறுபடலாம் என்பதை இந்நீதிமன்றம் தெளிவுப்படுத்தியுள்ளது. மேலும், அவரவர் பதவிநிலைக்கு ஏற்ப பணியாற்றும் இந்த நபர்கள் நிறுமத்தின் பொறுப்பேற்று, அந்நிறுமத்தின் அலுவலை நடத்தும் பொறுப்புடையவர் என இந்நீதிமன்றம் தீர்மானித்துள்ளது.அவர்கள் பொறுப்புடைமையிலிருந்து தப்பிப்பதற்கு குற்றம் புரியப்பட்ட போது, அவர்கள் அதைக்குறித்து அறிந்திருக்கவில்லை என்றோ, குற்றம் நடப்பதைத் தடுப்பதற்காக அவர்கள் உரியமுயற்சி மேற்கொண்டனர் என்றோ நிரூபிக்கவேண்டும்.

17. பூஜா ரவீந்தர் தேவிதாசனி -எதிர்-மகாராஷ்டிர khey muR kwWk; xUt h; [(2014) 16 எஸ்.சி.சி. 1] என்ற வழக்கில் இந்நீதிமன்றம் கருத்துரைத்ததாவது:

" 17. .....நிறுமத்துடன் தொடர்புடைய ஒவ்வொருவரும் ..... வகையத்தின் வரையறைக்குள் வரமாட்டார்கள். குற்றம் புரியப்பட்ட சமயத்தில், நிறுமத்தின் பொறுப்பேற்று, அதன் அலுவல்களை நடத்தும் பொறுப்புடைய அந்த நபர்களே குற்றச் செயலுக்கு பொறுப்புடையவராவர் என்று இந்நீதிமன்றத்தால் மீண்டும் மீண்டும் உறுதிப்படுத்தப்பட்டுள்ளது. தொடர்புடைய சமயத்தில் நிறுமத்தின் பொறுப்பேற்காமலும், அதன் அலுவலை நடத்தும் பொறுப்பிலில்லாத இயக்குநர், மா.ஆ. சட்டத்தின் பிரிவு 141-இன் கீழான குற்றத்திற்கு

பொறுப்புடையவராகமாட்டார். நேஷனல் ஸ்மால் இன்டஸ்ட்ரீஸ் கார்ப்பரேஷன் [நேஷனல் ஸ்மால் இன்டஸ்ட்ரீஸ் கார்ப்பரேஷன் லிமிடெட் எதிர் ஹர்மீத் சிங் பெயின்டால், (2010) 3 எஸ்.சி.சி. 330:(2010) 1 எஸ். சி.சி. (CML) 677:(2010) 2 எஸ். சி.சி. (கிரிமினல்) 1113] என்ற வழக்கில் இந்நீதிமன்றம் கருத்துரைத்ததாவது:(எஸ்.சி.சி. பக்கம் 336, பத்திகள் 13-14)

"13. பிரிவு 141-ஆனது பகரப் பொறுப்பை உருவாக்கும் ஒரு தண்டனை வகையமாகும், அறுதியிடப்பட்ட சட்டத்தின்படி அதைக் கண்டிப்பான முறையில் பொருள்கொள்ள வேண்டும்.எனவே, ஒரு நிறுமத்தின் இயக்குநர் என்ற கடமைப்பணி ஆற்றுவதைத் தவிர வேறு கடமைப்பணி ஏதுமில்லாத இயக்குநர் (எதிரியாக வரிசைப்படுத்தப்பட்டவர்) அந்நிறுமத்தின் பொறுப்பேற்று, அதன் அலுவல்களை நடத்தும் பொறுப்புடையவர் என்று முறையீட்டிலுள்ள மேலோட்டமான வெற்றுவாதுரை போதுமானதல்ல. ஆனால் 1-ஆம் எதிர்மேல்முறையீட்டாளர் எவ்வாறு மற்றும் எந்தவகையில் குற்றஞ்சாட்டப்பட்டுள்ள நிறுமத்தின் பொறுப்பேற்று அதன் அலுவலை நடத்தும் பொறுப்பூடையவர் என்பதைக் குறித்து முறையீடு எடுத்துரைக்கவேண்டும். இது தண்டனைச் சட்டத்தின் கண்டிப்பான பொருள்விளக்கத்துடன் குறிப்பாக பகரப் பொறுப்பை உருவாக்குகின்ற அச்சட்டங்களுடன் ஒத்துப்போகிறது.

14. ஒரு நிறுமத்தில் பல இயக்குநர்கள் இருக்கலாம், அவர்கள் நிறுமத்தின் பொறுப்பேற்று, அதன் அலுவலை நடத்தும் பொறுப்புடையவர்கள் என்ற அடிப்படையிலேயே இயக்குநர்களில் எவரையாவது அல்லது அவர்கள் அனைவரையும் ஒரு முறையீட்டில் குற்றஞ்சாட்டுவது தவிர, வேறேதும் பிரிவு 141-இன் கீழான வேண்டுறுத்தல்களை நிறைவு செய்வதற்கு போதுமானதல்ல அல்லது ஏற்புடையதல்ல. "

(அசலில் வலியுறுத்தப்பட்டுள்ளது)

18. கிர்தாரி லால் குப்தா -எதிர்-டி.ஹெச்.மெஹதா [கிர்தாரி லால் குப்தா -எதிர்-டி.ஹெச்.மெஹதா, (1971) 3 எஸ்.சி.சி. 189:1971 எஸ்.சி.சி. (கிரிமினல்) 279:ஏ.ஐ.ஆர். 1971 எஸ்.சி. 2162] என்ற வழக்கில் " ஒரு அலுவலின் பொறுப்பிலுள்ள " ஒரு நபர் என்றால், அந்நபர் அந்த நிறுமத்தின் அன்றாட அலுவல்களை ஒட்டுமொத்தமாக கட்டுப்படுத்தவேண்டும் என இந்நீதிமன்றம் கருத்துரைத்தது.

19. ஒரு நிறுமத்தின் இயக்குநர் (ஆண்/பெண்), அந்நிறுமத்தின் பொறுப்பேற்று, அதன் அலுவலை நடத்தும் பொறுப்பிலிருந்தாலோ அல்லது சம்பந்தப் பட்ட இயக்குநரின் ஒப்புதலுடனோ அல்லது மறைமுக ஆதரவுடனோ அல்லது அவரது ஏதேனும் கவனக் குறைவின் காரணமாகவோ குற்றம் புரியப்பட்டது என நிரூபிக்கப்பட்டாலோ, அந்நிறுமத்தால் புரியப்படும் குற்றத்திற்கு அந்நிறுமத்தின் af Fenuj z pf f ggljjfft h/ (f hz f: " கர்நாடக மாநில அரசு-எதிர்-பிரதாப் சந்த் (கர்நாடக மாநில அரசு -எதிர்-பிரதாப் சந்த், (1981) 2 எஸ்.சி.சி. 335:1981 எஸ்.சி.சி. (கிரிமினல்) 453]).

20. அதாவது, இந்நீதிமன்றத்தால் வகுத்துரைக்கப்பட்ட சட்டம் யாதெனில், மாற்றுமுறையாவணங்கள் சட்டத்தின் பிரிவு 141-இன் கீழ் நிறுமத்தால் புரியப்படும் குற்றங்களுக்கு நிறுமத்தின் இயக்குநரை பொறுப்புடையவராக்குவதற்கு அந்த இயக்குநர் எவ்வாறு மற்றும் எவ்வகையில் அந்நிறுமத்தின் அலுவலை நடத்தும் பொறுப்புடையவர் என்பதைத் தெரிவிக்கின்ற குறிப்பிட்ட வாதக்கூறுகள் அந்த இயக்குநருக்கு எதிராக இருக்க வேண்டும் என்பதாகும்.

21. சபிதா இராமமூர்த்தி எதிர்-ஆர்.பி.எஸ்.சன்ன பசவராத்தியா (சபிதா இராமமூர்த்தி-எதிர் ஆர்.பி.எஸ். சன்னபசவராத்தியா, (2006) 10 எஸ்.சி.சி. 581:(2007) 1 எஸ்.சி.சி. (A ரிமினல்) 621] என்ற வழக்கில் இந்நீதிமன்றத்தால் தீர்மானிக்கப் பட்டுள்ளதாவது:(எஸ்.சி.சி. பக்கங்கள் 584-85, பத்தி 7)

"7. முறையீட்டாளர், பிரிவின் வாசகங்களை ..... குறிப்பிட்டு எடுத்துரைக்க வேண்டியதில்லை என்றாலும், எதிரி பகரப் பொறுப்பாளர் என்று பார்த்தமாத்திரத்திலேயே கருத்துரைக்க நீதிமன்றத்தை இயல்விப்பதற்கு எது தேவைப்படுகிறது என்றால் தெளிவான சங்கதியேயாகும்.பிரிவு 141-ஆனது ஒரு சட்டப்

பூனைவை எழுப்புகிறது.மேற்படி வகையத்தின் விளக்கத்தின்படி ஒரு நபர் தனிப்பட்டமுறையில் அத்தகைய குற்றம் புரிந்ததற்கான பொறுப்பாளரல்லர் என்ற போதிலும், அவரே அதற்கான பகரப் பொறுப்பாளியாவார்.1956-ஆம் ஆண்டு நிறுமச் சட்டத்தின் கீழ் பதிவு செய்யப்பட்ட அல்லது ஒன்றிணைக்கப்பட்ட நிறுமத்தைப் பொறுத்தவரையில், நிறுமத்தால் புரியப்படும் குற்றத்திற்காக அதில் குற்றஞ்சாட்டப் பட்டவரை பகரப் பொறுப்பாளராக்கும் பொருட்டு, முறையீட்டு மனுவில் குறிப்பிட வேண்டிய தேவையான விவரங்கள் இருந்தால் மட்டுமே அத்தகைய பகரப் பொறுப்பை முடிவுசெய்ய இயலும். "

(வலியுறுத்திக் கூறப்பட்டது)

எதிரியை பகரப் பொறுப்பாளியாக்கும்பொருட்டு ஒரு தெளிவான சங்கதியை முறையான சான்றின் உறுதுணையின்றி பிரிவிலுள்ள வாசகங்களைச் சொல்லுக்கு சொல் பொருள்கொண்டால், அது மாற்றுமுறையாவணங்கள் சட்டத்தின் பிரிவு 141-இன் கீழ் அத்தகைய நபருக்கு எதிராக தொடரப்பட்ட வழக்கு நடவடிக்கைகளை செல்லாததாக்குவதற்கான ஒரு காரணமாகிவிடும். "

18. எனவே, ஒரு நிறுமத்தின் இயக்குநர், எவ்வாறு மற்றும் எவ்வகையில் நிறுமத்தின் அலுவலை நடத்தும் பொறுப்புடையவர் என்பது குறித்த தெளிவான சங்கதி ஏதுமின்றி, பிரிவின் வாசகங்களை எடுத்துரைப்பதன் காரணமாகவே இயக்குநரை பகரப் பொறுப்பாளராக்க முடியாது என்று இந்நீதிமன்றம் தீர்மானித்துள்ளதைத் தெளிவாகக் காணமுடிகிறது.

19. கே.கே. அஹூஜா -எதிர்-வி.கே.வோரா மற்றும் ஒருவர் [(2009) 10 எஸ்.சி.சி. 48] என் வழக்கில் இதேபோன்றதொரு கருத்துரை ஏற்கெனவே இந்நீதிமன்றத்தால் எடுத்துரைக்கப்பட்டுள்ளது.

20. தில்லி என்.சி.டி. அரசு, அரசு வழக்குரைஞர் மூலமாக, பூச்சிக்கொல்லி மருந்துகள், தில்லி என்.சி.டி. அரசு -எதிர்-ராஜீவ் குரானா [(2010) 11 எஸ்.சி.சி. 469] என்ற வழக்கின் நிலைப்பாட்டை இந்நீதிமன்றம் மீண்டும் வலியுறுத்தியுள்ளது:

"17. இவ்வனைத்து வழக்குகளின் கருத்துரை யாதெனில், குற்றஞ்சாட்டப்பட்டவராக கூறப்பட்டுள்ள இயக்குநர் எவ்வாறு நிறும் அலுவலின் பொறுப்பேற்றிருந்தார் அல்லது நிறுமத்தின் அலுவலை நடத்தும் பொறுப்புடையவர் என்பதைக் குறித்து முறையீட்டாளர் முறையீட்டில் குறிப்பிட வேண்டும்.ஒவ்வொரு இயக்குநரும் நிறுமத்தின் அலுவலை நடத்தும் பொறுப்புடையவராக இருப்பதில்லை மற்றும் பொறுப்பில் இருக்க வேண்டியதுமில்லை.இயக்குநரைப் பொறுத்த வரையில் அதுதான் நிலைப்பாடு என்றால், இயக்குநர்கள் அல்லாத அதிகாரிகளைப் பொறுத்தவரையில் ஒரு நிறுமத்தின் அலுவலை நடத்துவதில் அவர்களின் கடமைகளும், பொறுப்புகளும் என்ன என்பதையும், அவர் எவ்வாறு மற்றும் எவ்வகையில் பொறுப்புடையவர் மற்றும் கடப்பாடுடையவர் என்பதையும் குறிப்பிடுவதுதான் மிகவும் அவசியம் என்பதை வலியுறுத்தத் தேவையில்லை. "

21. அண்மையில் அசோக் மால் பாஃப்னா -எதிர் அப்பர் இந்தியா ஸ்டீல் மேனுஃபேக்சரிங் மற்றும் என்ஜினியரிங் கம்பெனி லிமிடெட் [(2018) 14 எஸ்.சி.சி. 202] என்ற வழக்கில், இந்நீதிமன்றம் கருத்துரைத்ததாவது:

"9. சட்டத்தின் பிரிவு 141-இன்படி ஒரு நபரின் மீது பகரப் பொறுப்பைப் பிணைப்பதற்கு எவ்வாறு மற்றும் எந்தவகையில் குற்றஞ்சாட்டப்பட்டவர் பொறுப்புடையவர் என்பதை முறையீட்டாளர் குறிப்பிட்டுக்காட்டவேண்டும் என்பது குறித்து இந்நீதிமன்றத்தால் சங்கிலித்தொடர்போன்ற வழக்குகளில் சட்டம் நன்கு அறுதியிடப்பட்டுள்ளது.ஒரு நபர், தவறிழைத்த நிறுமத்தின் இயக்குநர் என்பதாலேயே, இச்சட்டத்தின் கீழ் அவர் பொறுப்புடையவராகமாட்டார்.நிறுமத்தின் அலுவல்களுக்கு தலைமை வகிக்கும் நபர் குற்றம் புரியப்பட்ட சமயத்தில் நிறுமத்தின் அலுவலை நடத்தும் பொறுப்பேற்று, அதன் பொறுப்புடையவராயிருந்தால் மட்டுமே, அக்குற்றச் செயலுக்கு பொறுப்புடையவராக கருதப்படுவாரென்று இந்நீதிமன்றம்

மீண்டும்மீண்டும் வலியுறுத்தியுள்ளது.(காண்க: பூஜா ரவீந்தர் தேவிதாசனி -எதிர்- மகாராஷ்டிர மாநில அரசு (பூஜா ரவீந்தர் தேவிதாசனி -எதிர் மகாராஷ்டிர மாநில அரசு, (2014) 16 எஸ்.சி.சி. 1:(2015) 3 எஸ்.சி.சி. (சிவில்) 384:(2015) 3 எஸ்.சி.சி.

(கிரிமினல்) 378:ஏ.ஐ.ஆர். 2015 எஸ்.சி. 675]).

10. அதாவது, இந்நீதிமன்றத்தால் வகுத்துரைக்கப்பட்ட சட்டம் யாதெனில், சட்டப்பிரிவு 141-இன் கீழ் நிறுமத்தால் புரியப்படும் குற்றங்களுக்கு, நிறுமத்தின் இயக்குநரை பொறுப்புடையவராக்குவதற்கு அந்த இயக்குநர் எவ்வாறு மற்றும் எவ்வகையில் அந்நிறுமத்தின் அலுவலை நடத்துவதற்கான பொறுப்பிலிருந்தார் என்பதைத் தெரிவிக்கின்ற குறிப்பிட்ட வாதக்கூறுகள் அந்த இயக்குநருக்கு எதிராக இருக்கவேண்டும் என்பதாகும். "

22. இந்தக் கருத்துரைகளின் அடிப்படையில் நாம் தற்போதைய மேல்முறையீட்டாளர்களைப் பொறுத்தவரையில், முறையீட்டில் அளிக்கப்பட்டுள்ள கூற்றுகளைப் பரிசீலிக்கலாம்:

"3. 5 முதல் 8 வரையிலான குற்றஞ்சாட்டப்பட்டவர்கள் தி/ள்.கேஷெட் பார்மாசுடிகல்ஸ் பிரைவேட் லிமிடெட், தானா பாடி கிராமம், நாலாகர் வட்டம், சோலன் மாவட்டம் (இமாச்சலப் பிரதேசம்) அஞ்சல் குறியீட்டு எண் 173205, அதன் தலைமை அலுவலகமான 415, ஷாஹா நகர், வொர்லி, மும்பை-400 018-இன் இயக்குநர்களாக இருந்து நிறுமத்தின் அன்றாட பணிகளைக் கவனித்து வருகின்றனர்.

மேலும், 4-ஆவது குற்றஞ்சாட்டப்பட்டவர் ஒரு தனியார் நிறுவனமாகும், மருந்துப் பொருட்கள், ஒப்பனைப் பொருட்கள், அழகு சாதனப் பொருட்கள், எண்ணெய்கள், இரசாயனம், உணவுப் பொருட்கள் மற்றும் பலசரக்குப் பொருட்கள், கால்நடை மற்றும் அறுவை சிகிச்சை உபகரணங்கள் ஆகியவற்றை தயாரித்தல், வாங்குதல், விற்றல், ஏற்றுமதி மற்றும் இறக்குமதி செய்தல் மற்றும்/அல்லது எரி சாராயம் உட்பட மருத்துவ தயாரிப்புகளின் விற்பனையாளர் களாகவும் தொழில் செய்துவருகிறது.

மேலும், 4-ஆவது குற்றஞ்சாட்டப்பட்டவருக்கு (1) தானா பாடி கிராமம், நாலாகர் வட்டம், சோலன் மாவட்டம், (இமாச்சலப் பிரதேசம்) அஞ்சல் குறியீட்டு எண் 173205

மற்றும் (2) சி -582, ரிகோ இண்டஸ்டிரியல் ஏரியா, பிவாடி, அல்வார் மாவட்டம், இராஜஸ்தான் ஆகிய இடங்களில் தயாரிப்பு பிரிவுகள் இருந்தன.

மேலும், 4-ஆவது குற்றஞ்சாட்டப்பட்டவரான நிறுமம், 17.3.2006 அன்று வழங்கப்பட்டதான படிவ எண் 25-இல் மருந்துத் தயாரிப்பு உரிமம் எண் எம்.என்.பி./05/267 மற்றும் படிவ எண் 28-இல் உரிமம் எண் எம்.பி./05/268- ஐ பெற்றிருந்தது.அது 16.3.2011 வரை செல்லத்தக்கதாகும்.

XXX XXX XXX

25. மேலும், முறையீட்டாளர் 4-ஆவது குற்றஞ்சாட்டப்பட்ட நிறுமத்தின் வளாகமான தி/ள்.கேஷெட் பார்மாசுடிகல்ஸ் பிரைவேட் லிமிடெட், தானா பாடி கிராமம், நாலாகர் வட்டம், சோலன் மாவட்டம் (இமாச்சலப் பிரதேசம்) அஞ்சல் குறியீட்டு எண் 173205-ஐ 12.2.2009 அன்று சென்று பார்வையிட்டார்.ஆய்வுசெய்த சமயத்தில், தொழில்நுட்ப துணைத் தலைவர் திரு. அஜய் பிரகாஷ் குப்தா, 9 மற்றும் 10-ஆம் குற்றஞ்சாட்டப்பட்டவர்கள் அங்கு இருந்தனர்.4 முதல் 10 வரையிலான குற்றஞ்சாட்டப்பட்டவர்கள், மே, 2006 எனத் தயாரிப்பு தேதியிடப்பட்ட தயாரிப்பு உரிமம் எண் எம்.பி./05/268/பி, எண் ஹெச்.எம்.எஸ்./6015 சி கொண்ட " ஹெம்ஃபர் சிரப் " -ஐ தயாரித்த தாகவும், அது 4-ஆவது குற்றஞ்சாட்டப்பட்டவரான எண் எம்.பி./05/268 என்ற உரிமம் கொண்ட தி/ள்.கேஷெட் பார்மாசுடிகல்ஸ் பிரைவேட் லிமிடெட், தானா பாடி கிராமம், நாலாகர் வட்டம், சோலன் மாவட்டம் (இ.பி.) அஞ்சல் குறியீட்டு எண் 173205 என்ற வளாகத்தில் ' நிர்ணயிக்கப்பட்ட தரநிலையில் இல்லை ' என என அறிவிக்கப்பட்டுள்ளதாகவும், ரியாலிட்டி வேர்ஹவுசிங் பிரைவேட் லிமிடெட், கட் எண் 2323/1, சொத்து எண் 115, பூனே நகர் சாலை, வாகோலி அஞ்சல், ஹவேலி வட்டம், பூனே மாவட்டம்-412207-இல் அமைந்துள்ள தி/ள்.அல்கீம் லெபாரட்ரீஸ் லிமிடெட் மூலம் மேற்படி மருந்துகளை பீட் மாவட்டம், பீட் ஜால்னா சாலை மருத்துவர் வைத்தியா மருத்துவமனைக்கு பின்புறம் உள்ள தி/ள்.பிரியா ஏஜென்சிஸிடம் விற்றதாகவும் விசாரணையின்போது தெரிவிக்கப்பட்டது. '

23. எனவே, தற்போதைய மேல்முறை-யீட்டாளர்களை பொறுத்தவரையில், திட்டவட்டமான வாதக்கூறுகள் ஏதும் இல்லை என்று தெரிகிறது.மேலும், தற்போதைய மேல்முறையீட்டாளர்கள், குற்றஞ்சாட்டப்பட்ட நிறுமத்தின் முழு நேர இயக்குநர்களோ, மேலாண்மை இயக்குநர்களோ அல்லர் என்பது குறிப்பிடத்தக்கது.

24. மேலும், படிவ எண் 28 உடன், மேற்படி விதிகளின் விதி 76-இன் வகையங்களுக்கேற்ப, 9 மற்றும் 10-ஆம் குற்றஞ்சாட்டப்பட்டவர்கள், உரிமம் வழங்கும் அதிகாரியால் படிவ எண் 28-இல் குறிப்பாக அங்கீகரிக்கப்பட்டுள்ளனர் என்பது கவனத்திற்குரியது.மேற்படி விதிகளின் விதி 76-இன் துணைவிதி (1) -இல் கோரப்பட்டுள்ளவாறு 9-ஆம் குற்றஞ்சாட்டப்பட்டவரின் தீவிர வழிகாட்டுதலின்பேரிலும் நேரடி மேற்பார்வையின் கீழும் மருந்து தயாரிப்புப்பணி நடத்தப்பட்டதால் அவரே அங்கீகாரம்பெற்ற நபராவார்.அதேபோன்று, ஆய்வுப்பிரிவின் தலைவராக அங்கீகரிக்கப் பட்டுள்ள 10-ஆம் குற்றஞ்சாட்டப்பட்டவர், மேற்படி விதிகளின் பகுதி X-இன் வகையங்களின்படி கோரப்பட்டுள்ளவாறு, மருந்துப் பொருட்களின் வீத அளவு, தரம் மற்றும் தூய்மை ஆகியவற்றை சோதனை செய்வதற்கான பொறுப்பாளராக இருக்கவேண்டும்.எனவே, முறையீட்டில் மேற்படி சட்டத்தின் பிரிவு 34-இன் வேண்டுறுத்தல் முற்றிலும் இல்லை என்பதே எங்களது ஆழ்ந்தாராய்ந்த கருத்தாகும்.

25. எதிர்ப்புக்குள்ளான.உத்தரவுகள் மற்றொரு காரணத்தின்பேரிலுங்கூட செல்லாததாக்கப்பட்டு நீக்கறவு செய்யப்படுவதற்குரியதாகும்.

26. உயர் நீதிமன்றத்தின் கற்றறிந்த தனியமர் நீதியரசரால் பிறப்பிக்கப்பட்டுள்ள உத்தரவைப் பார்வையிட்டதன்பேரில் நீதிமுறைக் கட்டளையின் முறையான உத்தரவை பிறப்பித்ததில் கற்றறிந்த தலைமை குற்றவியல் நீதித்துறை நடுவர் ஒரு சிறிதும் அக்கறை கொள்ளவில்லை என்பது தெரியவருகிறது.உயர் நீதிமன்றத்தின் கற்றறிந்த தனியமர் நீதியரசரின் தீர்ப்புரை மற்றும் உத்தரவின் பின்வரும் பகுதி குறிப்பிடத்தக்கதாகும்:

….. மனுதாரர்களால் தாக்கல் செய்யப்பட்ட சான்றிடப்பட்ட நகலின் அடிப்படையில் அத்தகைய முறைப்படியான உத்தரவு ஏதுமில்லை என்பது உண்மையாக இருந்தபோதிலும், தினசரி வழக்குக் குறிப்பேட்டிலிருந்து (தினசரி வழக்கு நடவடிக்கையின் குறிப்புகள்) அவ்வுத்தரவானது, 30.3.2009 அன்றுதான் பிறப்பிக்கப்பட்டுள்ளது என்பதை தினசரி வழக்குக் குறிப்பேட்டின் நகல் காண்பிக்கிறது.30.3.2009-ஆம் தேதியிடப்பட்ட தினசரி வழக்குக் குறிப்பேடு தெரிவிப்பதாவது:

(i) விலாஸ் விஷ்வநாத் துசானி என்பவரால் முறையீடு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

(ii) 44 ஆவணங்கள் அடங்கிய ஆவணப் பட்டியலின் நகல்

சான்றாவணம் 1 (நீதிமுறைக் கட்டளைப் பிறப்பித்தல்) -இன்பேரில் உத்தரவு பிறப்பிக்கப் பட்டது.குற்ற வழக்குகளின் பதிவேட்டில் பதிவு செய்து, குற்றஞ்சாட்டப்பட்டவருக்கு எதிராக அழைப்பாணை வழங்குக.குற்றஞ்சாட்டப்பட்டவர் 18.6.2009 அன்று முன்னிலையாகுமாறு வழக்குப் பட்டியலிடுக.

நீதிமுறைக் கட்டளைக்கான உத்தரவு பிறப்பிக்கப்பட்டதும், குற்றஞ்சாட்டப்பட்டவரை நீதிமன்றத்தில் முன்னிலையாவதற்கும் அவர்களுக்கு அழைப்பாணைகள் அனுப்பப்பட்டன என்பதை முடிவு செய்வதற்கு இப்பதிவாவணம் போதுமானது. "

27. எனவே, நீதிமுறைக் கட்டளைக்கான முறையான உத்தரவு இல்லாதபோதிலும், நீதிமுறைக் கட்டளை அனுப்புவதற்கான உத்தரவு பிறப்பிக்கப் பட்டுள்ளது என்பதை முடிவு செய்வதற்கு இப்பதிவாவணம் போதுமானது என்று உயர் நீதிமன்றத்தின் கற்றறிந்த தனியமர் நீதியரசர் தீர்மானித்துள்ளார் என்பதைத் தெளிவாகக் காணமுடிகிறது.

28. நீதிமுறைக் கட்டளை அனுப்புவதற்கான உத்தரவு என்பது ஒரு வெற்று நடைமுறையல்ல.இவ்வழக்கில் நடவடிக்கையெடுப்பதற்குப் போதுமான காரணம் உள்ளதா?இல்லையா?என்பதைக் குறித்து நீதித்துறை நடுவர் தனது சிந்தையைச் செலுத்தவேண்டும்.அத்தகைய கருத்துருவாக்கம் குறித்து உத்தரவிலேயே

குறிப்பிடவேண்டும்.குற்றஞ்சாட்டப்பட்டவருக்கு எதிரான வழக்கில் முகாந்திரம் உள்ளது என்ற முடிவுக்கு வருகையில், அதில் எந்தக் காரணங்களும் அளிக்கப்படவில்லையெனில், அவ்வுத்தரவு நீக்கறவு செய்யப்படுவதற்குரியதாகும்.உத்தரவில் விளக்கமான காரணங்கள் அளிக்கப்பட வேண்டியதில்லை என்பதில் சந்தேகம் ஏதுமில்லை.இதுதொடர்பாக, சுனில் பாரதி மிட்டல் -எதிர்-மத்தியப் புலனாய்வுத் துறை [(2015) 4 எஸ்.சி.சி. 609] என்ற வழக்கில் இந்நீதிமன்றத்தின் தீர்ப்பூரை குறிப்பீடு செய்யப்பட்டுள்ளது, அது பின்வருமாறு:

"51. மாறாக குற்றமொன்றை விசாரணைக்கு எடுத்துக்கொள்ளும் நடுவர் ஒருவரின் கருத்துப்படி நடவடிக்கை எடுப்பதற்கான போதுமான காரணமிருப்பின், நீதிமுறைக் கட்டளை அனுப்புதல் குறித்து குற்றவியல் நடைமுறைச் சட்டத்தின் பிரிவு 204 விவாதிக்கின்றது.இப்பிரிவானது, குற்றவியல் நடவடிக்கை தொடங்குவது குறித்த தாகும்.ஒரு வழக்கை விசாரணைக்கு எடுத்துக் கொள்ளும் நடுவர் (முறையீட்டைப் பெற்றுக்கொள்ளும் நடுவராகவோ அல்லது பிரிவு 192-இன் கீழ் அது எவருக்கு மாற்றம் செய்யப்படுகிறதோ அவராகவோ இருக்கலாம்) முன்பாக உள்ள சான்றாவணங்களை (அதாவது, முறையீடு, முறையீட்டாளர் மற்றும் அவரது சாட்சிகள் முன்னிலையாகும்பட்சத்தில் அவர்களை விசாரித்தல் அல்லது விசாரணை குறித்த அறிக்கை ஏதுமிருப்பின்) பரிசீலிப்பதன் பேரில் ஒரு குற்றம் தொடர்பாக நடவடிக்கை மேற்கொள்வதற்கு முகாந்திரம் உள்ளதெனக் கருதினால், அவர் குற்றஞ்சாட்டப்பட்டவருக்கு எதிராக நீதிமுறைக் கட்டளை அனுப்பவேண்டும்.

52. நீதிமுறைக் கட்டளை அனுப்புதல் அல்லது மறுத்தல் குறித்து விரிவான விருப்பதிகாரம் அளிக்கப்பட்டுள்ளது, மேலும் அது, நீதிமுறையில் செயற்படுத்தப்படவேண்டும்.ஒரு முறையீடு தாக்கல் செய்யப்பட்டுவிட்டதாலேயே அந்த நபரை வலுக்கட்டாயமாக நீதிமன்றத்திற்கு இழுக்கக் கூடாது.வழக்கின் முகாந்திரம் மெய்ப்பிக்கப் பட்டால், நடுவர் நீதிமுறைக் கட்டளை அனுப்ப வேண்டும், இது நடுவர் தண்டனைத் தீர்ப்பில் முடிவதற்கான சாத்தியமில்லை என்று அவர் கருதினாலும், அதை மறுத்துவிட இயலாது.

53. எனினும், பிரிவு 204-இல் குறிப்பிடப்பட்டுள்ள " வழக்கு நடவடிக்கைக்கான போதுமான காரணம் " எனும் வாசகங்கள் மிகவும் முக்கியத்துவம் வாய்ந்தவையாகும். மேற்படி குற்றஞ்சாட்டப்பட்டவருக்கு எதிராக நடவடிக்கை மேற்கொள்ள போதுமான அடிப்படைக் காரணம் உள்ளது என்ற கருத்துரை யானது முறையாக சிந்தையைச் செலுத்திய பின்னரே உருவாக்கப்படவேண்டும்.இவையே, அவ்வாறான கருத்துருவாக்கத்தை உத்தரவிலேயே குறிப்பிட வேண்டும் என்பதைப் பெரிதும் குறித்துரைக்கின்ற வாசகங்களாகும்.உத்தரவில் விளக்கமான காரணங்கள் அடங்கியிருக்க வேண்டியதில்லை என்றபோதிலும், குற்றஞ்சாட்டப் பட்டவருக்கு எதிரான வழக்கில் முகாந்திரம் உள்ளது என்ற முடிவுக்கு வருகையில் அதில் எந்தக் காரணமும் அளிக்கப்படவில்லையெனில், அவ்வுத்தரவு நீக்கறவு செய்யப்படுவதற்குரியதாகும்.கொடுக்கப்பட்ட காரணம் வெளிப்படையாகவே தவறாகயிருப்பின், அவ்வலுவான காரணத்தின் பேரில் அவ்வுத்தரவு சட்டப்படி பாதகமாகிவிடும். "

29. (மேற்படி) அசோக் மால் பாஃப்னா என்ற வழக்கில் இந்நீதிமன்றத்தால் இதேபோன்ற கருத்துரை எடுக்கப்பட்டுள்ளது.

30. தற்போதைய வழக்கில், நீதிமுறைக் கட்டளை அனுப்புவதற்கான உத்தரவுக்கு ஆதரவாக எந்தக் காரணங்களும் இல்லை என்பதைத் தவிர, உள்ளபடியாக உயர் நீதிமன்றத்தின் கற்றறிந்த தனியமர் நீதியரசரின் உத்தரவிலிருந்து, அவ்வாறான எந்த உத்தரவும் பிறப்பிக்கப் படவேயில்லை என்பது தெளிவாகிறது.உயர் நீதிமன்றத்தின் கற்றறிந்த தனியமர் நீதியரசர், பதிவாவணத்தின் அடிப்படையில், நீதிமுறைக் கட்டளை அனுப்புவதற்கான ஓர் உத்தரவு இருந்ததாக அனுமானித்துள்ளார். அவ்வாறான அணுகுமுறை சட்டப்படி நிலைநிறுத்தத்தக்கதல்ல என்று நாங்கள் காண்கிறோம்.எனவே, மேல்முறையீடு அனுமதிக்கப்படுவதற்குரியதாகும்.

31. முடிவாக, மேல்முறையீடு அனுமதிக்கப் படுகிறது.பீட், கற்றறிந்த தலைமை குற்றவியல் நீதித்துறை நடுவரால் பிறப்பிக்கப்பட்ட 30.3.2009-ஆம் தேதியிடப்பட்ட நீதிமுறைக் கட்டளை அனுப்புவதற்கான எதிர்ப்புக்குள்ளான உத்தரவும், குற்றவியல்

சீராய்வு மனுவான குற்றவியல் சீராய்வு மனு எண் 115/2013- ஐ தள்ளுபடி செய்கின்ற 25.11.2014-ஆம் தேதியிடப்பட்ட பீட், கற்றறிந்த அமர்வு நீதிபதியால் பிறப்பிக்கப்பட்ட உத்தரவும் செல்லாத தாக்கப்பட்டு, நீக்கறவு செய்யப்படுகின்றன.தற்போதைய மேல்முறையீட்டாளர்களுக்கெதிரான முறையீடு தள்ளுபடி செய்யப்படுகிறது.மற்ற குற்றஞ்சாட்டப்பட்டவர்களின் மீது முறையீடு தொடர்பான சட்டப்படியான நடவடிக்கை தொடரும் என்பதைச் சொல்லத் தேவையில்லை.